ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதில் உங்களின் உறுதி ஊக்கமளிக்கிறது!

# தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற வாழ்த்துகள்!

## முதல்வருக்கு - கேரள முதல்வர் பினராயி விஜயன் வாழ்த்துச் செய்தி!

திருவனந்தபுரம், மார்ச் 2-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், “தாங்கள் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறேன்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் சமூக வலை தளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**தோழர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**நமது அரசியலமைப்பில் பொதிந்துள்ள ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற விழுமியங்களைப் பாதுகாப்பதில் உங்கள் உறுதியான நிலைப்பாடு மிகவும் ஊக்கமளிக்கிறது.**

**நீங்கள் எல்லையில்லா மகிழ்ச்சியுடனும், நல்ல ஆரோக்கியத்துடன் திகழவும், தொடர்ச்சியான வெற்றிகளைப் பெறவும் வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில், கேரள முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## துணை ராணுவப் படையினர் தேர்தல் பணிக்காக தமிழ்நாடு வருகை!

*சென்னை, மார்ச் 2-*


*15 கம்பெனி துணை ராணுவப்படையினர் தேர்தல் பணிக்காக தமிழ்நாடு வருகை தர உள்ளனர். மார்ச் 7ம்தேதி 10 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் தமிழகம் வருவர்; ஒரு கம்பெனியில் 90 வீரர்கள் இருப்பர் என்று தமிழக தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார்.*

*மக்களவைத் தேர்தலின் போது தமிழகத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட 200 கம்பெனி பாதுகாப்புப் படைகள் கேட்டுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.*

தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (10)

## மார்ச் 3 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜீன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, மார்ச் 3 ஞாயிற்றுக்கிழமை அன்று முரசொலி சிறப்பிதழ், “முத்தமிழறிஞர் கலைஞருடன் இளைய தலைமுறை” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

ஸ்டெர்லைட் ஆலை மூடியது சரியே : உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு வரவேற்பு:

# அரசின் சட்டப் போராட்டங்களுக்குக் கிடைத்த வெற்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, மார்ச் 2 -

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடியது சரியே என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததை வரவேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தொடர்ந்து போராடிய மக்களுக்கும், தமிழ்நாடு அரசின் வலிமையான சட்டப் போராட்டங்களுக்கும் கிடைத்த வெற்றி இது என்று பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

தூத்துக்குடி ஸ்டர்லைட் ஆலையை மூடியது சரியே என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**தூத்துக்குடியில் சுற்றுச்சூழலுக்கு எதிரான ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நமது அரசு முன்வைத்த வலுவான வாதங்களால், ஆலை நிர்வாகத்தின் அனைத்து விளக்கங்களும் நொறுங்கி, ஆலையை மூடியது சரியே என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.**

**நச்சு ஆலைக்கு எதிராகத் தொடர்ந்து போராடிய மக்களுக்கும், நமது அரசின் வலிமையான சட்டப் போராட்டங்களுக்கும் கிடைத்த வெற்றி இது.**

**எத்தகைய ஆபத்தில் இருந்தும் மக்களைக் காப்போம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# முதல்வர் பிறந்த நாள்: பல்லாயிரவர் நேரில் வாழ்த்து!...

முதல் பக்கத் தொடர்ச்சி

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப் பெருந்தகை, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து கூறினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மூத்த தலைவர் கே.எஸ்.அழகிரி மற்றும் புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, புதுச்சேரி நாடாளு மன்ற உறுப்பினர் வைத்திலிங்கம், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்டோரும் முதலமைச்சருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் முத்தரசனும், முதலமைச்சருக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் காதர் மொகிதீன் உள்ளிட்டோரும் பிறந்தநாள் வாழ்த்து கூறினர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிப் பொதுச்செயலாளர் ஈஸ்வரன், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் உள்ளிட்டோரும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

இதேபோல், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நடிகர் விஜய் மற்றும் திரையுலகப் பிரபலங்கள் பலரும் வாழ்த்துக் கூறினர்.

### சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தொலைபேசி மூலம் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

### கலைஞானி கமலஹாசன்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மக்கள் நீதி மய்யத் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் பிறந்தநாள் வாழ்த்து கூறியுள்ளார். அவர் வெளியிட்ட சமூக வலை தளப்பதிவில், சமூக நீதி, மகளிர் மேம்பாடு, இளைஞர் நலம், தொழில் வளர்ச்சி என தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் செலுத்தி வரும் தனது அன்பிற்கினிய நண்பர், தி.மு.க. தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நீடூழி வாழ அவரது பிறந்தநாளில் வாழ்த்துவதாக கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

### நடிகர் விஜய்

இதேபோல், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நடிகர் விஜய் மற்றும் திரையுலக பிரபலங்கள் பலர் வாழ்த்து கூறியுள்ளனர்.

மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு

# 7.37 பில்லியன் டாலராக உயர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது!

## மார்ச்சுக்குள் 9 பில்லியன் டாலராக உயர்ந்து புதிய சாதனை படைக்கும்!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

சென்னை, மார்ச் 2-

தமிழ்நாடு முதலமைச்சர் தொழில் வளர்ச்சிக்கு அளிக்கும் ஊக்கம் காரணமாக மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு 7.37 பில்லியன் டாலராக உயர்ந்து இந்தியாவில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. மார்ச் மாதத்திற்குள் 9 பில்லியன் டாலராக உயர்ந்து புதிய சாதனை படைக்கும் என்று தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள், தொழில் முதலீட்டு மாநாடுகள், வெளிநாட்டுப் பயணங்கள் மூலம் தொழில் முதலீடுகளை ஈர்த்து வருகிறார்கள். இதன் காரணமாக ஒருதொழில் புரட்சியை நோக்கி தமிழ்நாடுஅரசின் தொழில் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் தொழில் துறையில் உயர்ந்த தொழிற் கொள்கைகளை கடைப்பிடிப்பதால், மாநிலத்தின் தொழில் வளர்ச்சி விரைவுபடுத்தப்படுகிறது.

மின்னணு பொருட்களின் ஏற்றுமதியில், இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்கிடும் தமிழ்நாடு, தொடர்ச்சியாக, இந்நிலையை உறுதிப்படுத்தி வருகின்றது. மின்னணுவியல் ஏற்றுமதி தற்போது 7.37 பில்லியன் டாலரை அடைந்துள்ளது. இந்தியாவின் மொத்த ஏற்றுமதியே 22.65 பில்லியன் டாலர் எனும்போது, தமிழ்நாட்டின் ஏற்றுமதி, இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில், கிட்டத்தட்ட 32.52 சதவிகிதம் ஆகும்.

முந்தைய நிதியாண்டில் (2022-2023) மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி 5.37 பில்லியன் டாலர் ஆகும். இந்தத் தரவுகளை ஒப்பிடுகையில், நடப்பு நிதியாண்டில், அதாவது 2023-24-ல், 10 மாத காலகட்டத்திற்குள்ளாகவே, 7.37 பில்லியன் டாலர் மதிப்புள்ள மின்னணுப் பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டின் (2023-2024) இறுதிக்குள் மாநிலத்தின் மின்னணு பொருட்களின் ஏற்றுமதி 9 பில்லியன் டாலர் எய்தி புதிய சாதனை படைக்கும்.



தமிழ்நாடு பல்வேறு துறைகளில், குறிப்பாக மின்னணுப் பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில், தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது என்றால், அதற்குப் பல காரணிகள் உள்ளது. தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமைத்துவம், முனைப்பான ஆளுமை, கொள்கை சார்ந்த அணுகுமுறை, வளர்ச்சியை இலக்காகக் கொண்டு செயல்படும் நிர்வாகம், உற்பத்தி மற்றும் துல்லியப் பொறியியலில் சிறந்து விளங்குதல், உயர்தர தொழில்நுட்பங்களைக் கையாளும் திறன் போன்ற பல சிறப்பம்சங் களைக் கொண்டு, இத்தகைய அபார வளர்ச்சியை தமிழ்நாடு கண்டுள்ளது.

இந்த அபரிமிதமான வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ளவும், இத்துறையில் கொட்டிக் கிடக்கும் பல்வேறு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்திலும், அன்மையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை 2024 வெளியிடப்பட்டுள்ளது. 2030-ஆம் ஆண்டிற்குள், இத்துறையின் வளர்ச்சியை நன்கு துரிதப்படுத்தி, 2 இலட்சம் திறன் வாய்ந்த பணியாளர்களை உருவாக்குவதே, இந்தக் கொள்கையின் உயரிய நோக்கமாகும்.

பல்வேறு துறை சார்ந்த முதலீட்டாளர்களுடன் தொடர்ச்சியாக நல்லுறவுகள் மேற்கொண்டு வருவதன் மூலம், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வேகமாக குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்து வருகிறது. மிகச் சிறந்த மனித வளம், அனைத்துத் துறைகளும் மேம்படும் வகையில் அமைந்துள்ள சிறப்பான சூழலமைப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி போன்ற வலுவான அம்சங்களைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

இச்சாதனையைப் பற்றிப் பேசுகையில், தொழில், முதலீட்டு மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, “இந்தியாவின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கும், தமிழ்நாடு அளித்து வரும் பெரும் பங்கினை, இந்தச் சாதனை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டு வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், உற்பத்திக்கான பிரதான முதலீட்டு மாநிலமாகவும், இளைஞர்களுக்கு உயர்தர வேலைகளை உருவாக்குவதற்கான மையமாகவும், தமிழ்நாடு பிரகாசமாகச் சுடர் விட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்வது மட்டுமின்றி, எங்களின் தொழில் வளர்ச்சிப் பாதையில், மேலும், மேலும் புதிய சாதனைகளை உருவாக்குவோம்” என்று தெரிவித்துள்ளார்.

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு:

# மாணவ-மாணவியர்க்கு வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

**சென்னை, மார்ச் 2–**

**“பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வை எழுத உள்ள மாணவ–மாணவியர்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:-

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வை நாளை எழுத உள்ள மாணவர்களுக்கும் மாணவியர்க்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்!

உங்களது கல்வி வாழ்க்கையின் அடுத்தகட்டமான +2 இறுதித் தேர்வை அச்சமற்று எதிர்கொள்ளுங்கள். தெளிவாக எழுதுங்கள். நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றி அமைய வாழ்த்துகிறேன்.

தேர்வு என்பது மற்றுமொரு கல்வியியல் நடைமுறைதானே தவிர, அதுவே உங்களது திறமையை எடைபோடுவதற்கான அளவுகோல் கிடையாது. எனவே எவ்விதப் பதற்றமும் வேண்டாம்.

பெற்றோர்களும் இதனை நன்கு உணர்ந்து தங்களது குழந்தைகள் மீதான தேவையற்ற அழுத்தங்களைத் தவிர்த்து, அவர்களது வெற்றிக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.



திருப்பத்தூர் ஒன்றியத்தில் ‘இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல்’ பிரச்சாரத்தை தொகுதிப் பொறுப்பாளர் எ.வ.வே.கம்பன் தொடங்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் இல்லந்தோறும்

# ஸ்டாலினின் குரல் முதல் கட்ட திண்ணைப் பிரச்சாரம்!

*சிவகங்கை, மார்ச் 2-*

*கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் உத்திரவின் பேரில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் ஆலோசனையின் பேரில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதியிலும் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தீவிர திண்ணைப் பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டது. சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஒன்றியங்கள், நகரங்கள், பேரூர் கழகங்களின் சார்பில் காலை மாலை இரண்டு வேளைகளிலும் முதல்கட்டமாக வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனை விளக்கும் வகையில் துண்டு பிரச்சாரம் கொடுத்து நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் கழக வேட்பாளர்களுக்கு ம்கூட்டணி வேட்பாளர்க. ளுக்கும் வாக்களிக்குமாறு திண்ணைபிரச்சாரம் வாயிலாக வாக்கு சேகரித்தார்கள்.*



தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் நீலகிரி மாவட்டம் குன்னூர் கோட்டம் சிம்ஸ் பார்க் பகுதியில் புதிதாக திறக்கப்பட்டுள்ள 33/11 KV சிம் பார்க் துணை மின் நிலையத்தை திறந்து வைத்தார். உடன் மின்சார வாரிய அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.